Judicial Form No.60

CALENDAR AND JUDGMENT

(For use in cases whether there are more accused persons than one)

District of Tenkasi

Calendar of cases tried by the Judicial Magistrate of Shencottah.

| Date of offence | Date of Report of complaint | Remand or surrender of accused | Release on bail | Commen ce ment of trial | close of trial | Sentence of order |
|---|---|---|---|---|---|---|
| 20.12.14 | 20.12.14 | 23.12.14 | 23.01.15 | 30.7.25 | 09.07.26 | 15.07.26 |
| C.S.D.08.05.16 | Explanation of Delay and Remarks: NIL | | | | | |
| C.S.F.D.20.7.16 | | | | | | |
| D.Cogni.25.7.16 | | | | | | |
| A.P.D. 07.10.16 | | | | | | |

CC 426/2016 on the file of the Judicial Magistrate of Shencottah.

Complainant: The Sub-Inspector of Police, Ayikudy P.S in Cr.No.187/2014

| Name of the Accused | Age | Fathers/Husband's Name |
|---|---|---|
| Murugan | 21/14 | Maridurai |

| Caste or Religion | Calling | Residence | STATION |
|---|---|---|---|
| Hindu | Coolie | Parvathi amman kovil street, Kodikurichi | Ayikudy |

**Offence** : Section 379 IPC

**Sentence** : Accused is not guilty U/s 379 IPC and the accused is acquitted U/s 271(1) of BNSS.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2026.07.15 17:31:53 +0530

Judicial Magistrate,
Shencottah.

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செங்கோட்டை.**
**முன்னிலை: திரு.S.இளையராஜா, M.L.,**
**நீதித்துறை நடுவர்**
**2026–ம் ஆண்டு ஜூலை திங்கள் 15–ம் நாள் புதன்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.426/2016**
**(CNR.NO : TNTS120017692016)**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | அரசு சார்பாக,<br>உதவி ஆய்வாளர் அவர்கள்,<br>ஆய்க்குடி காவல் நிலையம்,<br>குற்ற எண்.187/2014 |
| //எதிர்// | | |
| குற்றம்சாட்டப்பட்டவர் | – | முருகன், (வயது 21/14),<br>த.பெ.மாரித்துரை, பார்வதி அம்மன் கோவில் தெரு, கொடிக்குறிச்சி. |
| குற்றம் சாட்டப்பட்டது | – | குற்றம்சாட்டப்பட்டவர் மீது பிரிவு 379 இதச படி |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | – | குற்றம்சாட்டப்பட்டவர் மீது பிரிவு 379 இதச படி |
| தீர்மானம் | – | குற்றம்சாட்டப்பட்டவர் பிரிவு 379 இதச படி குற்றவாளி இல்லை |
| புகார்நாள் | – | 20.12.2014 |
| குற்றம்சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்ட நாள் | – | 23.12.2014 |
| பிணையில் சென்ற நாள் | – | 23.01.2015 |
| கோப்பு நாள் | – | 20.07.2016 |
| விசாரணை தொடங்கப்பட்ட நாள் | – | 30.07.2025 |
| விசாரணை முடிக்கப்பட்ட நாள் | – | 09.07.2026 |
| தீர்ப்புரை நாள் | – | 15.07.2026 |

இவ்வழக்கானது 20.07.2016ம் தேதியன்று குவிமுச பிரிவு 190(1)ன் படி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, குற்றமுறையிடுனர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–1 திரு.ஆர்.சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்டவர்

தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.பழனிக்குமார் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, இன்று வரை இந்த நீதிமன்றத்தில் பரிசீலனையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று வழங்கும்,

## தீர்ப்புரை

1. **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

கடந்த 20.12.2014 ம் தேதி காலை 08.00 மணிக்கு ஸ்ரீநல்லமணி யாதவா கல்லூரிக்கு கிழக்கே மங்கம்மாள் சாலைக்கு கீழ்புறமுள்ள புகார்தாரருக்கு சொந்தமான நிலத்தில் வடக்கோரமாக கிழமேலாக தரையில் பதிக்கப்பட்டிருந்த சுமார் ரூ.16,000 மதிப்புள்ள 360 அடி வயரினை திருடிச் சென்றதாக குற்றஞ்சாட்டப்பட்டவர் மற்றும் இளஞ்சிறார் மீது ஆய்க்குடி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் இதச பிரிவுகள் 379–ன் படி இந்நீதிமன்றத்தில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. குற்ற இறுதி அறிக்கை இந்த நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு பிரிவு 204 குவிமுச–ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அழைப்பாணை அனுப்பியதன் பெயரில் குற்றம் சாட்டப்பட்டவர் இந்த நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 207 குவிமுச–ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. குற்றம் சாட்டப்பட்டவருக்கு போதிய சந்தர்ப்பமும், அவகாசமும் வழங்கிய பின்பு குற்றம் சாட்டப்பட்டவர் மீது குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய முகாந்திரம் இருப்பதாக தெரியவந்ததால் இந்த நீதிமன்றம் பிரிவு 240(1) குவிமுச படி குற்றம் சாட்டப்பட்டவர் மீது பிரிவு 379 இதச படி குற்றச்சாட்டு வனைந்து பிரிவு 242 குவிமுச படி குற்றச்சாட்டு குறித்து விளக்கி வினவியபோது குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றத்தை மறுத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளை ஆஜர்படுத்த பிரிவு 242(1) குவிமுச கீழ் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 மற்றும் அ.சா.பொ.1 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 புகார்தாரர், அ.சா.2, அ.சா.3 ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள், அ.சா.4 புலன் விசாரணை அதிகாரி

5. **அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:**

அ.சா.1 ரெங்கராஜ் சாட்சியத்தில், எதிரிகளை தெரியும், கடந்த 20.12.2014 ம் தேதி மங்கம்மாள் சாலை ரோட்டில் அ.சா.1 24 ஏக்கரில் பிளாட் போட்டு வைத்திருந்ததாகவும், அதற்கு கருப்பு வெயர் போட்டு லைட் போட்டு வைத்திருந்ததாகவும், காலை 08.00 மணியளவில் சென்றுபார்த்தபோது சுமார் 350 மீட்டர் வெயர் காணவில்லை, அதன் மதிப்பு சுமார் 18 ஆயிரம் இருக்கும் எனவும், ஆய்க்குடி காவல் நிலையம் சென்று நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்ததாகவும், அ.சா.1 யிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் எனவும், சுமார் 3 மாதம் கழித்து போலீசார் அ.சா.1 யை காவல் நிலையம் வரச்சொன்னதாகவும், கொஞ்ச வொயரை காண்பித்து இது உங்கள் வொயரா என்று கேட்டதாகவும், அ.சா.1 அடையாளம் சொன்னதாகவும், அந்த வொயரை அ.சா.1 நீதிமன்றம் மூலமாக மனு செய்து பெற்றுக்கொண்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.2 முத்துக்குமார் சாட்சியத்தில், கடந்த 10 வருடத்திற்கு முன்பு மாலை சுமார் 5 மணியளவில் அ.சா.2 ம், அவரது நண்பர் அழகு என்பவரும் இ–விலக்கு பக்கம் இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்ததாகவும், அப்போது போலீசார் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்ததாகவும், அப்போது போலீசார் தன்னிடம் கையெழுத்து வாங்கியதாகவும், போலீசார் கேட்டுகொண்டதால் கையெழுத்து போட்டுக்கொடுத்ததாகவும், அதில் எழுதப்பட்டுள்ள விவரம் அ.சா.2 க்கு தெரியாது எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.3 அழகு சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் முருகன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து மற்றும் 20.12.2014ம் தேதி தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் உள்ள 2வது கையெழுத்து தன்னுடையது தான் எனவும், சுமார் 10 வருடத்திற்கு முன்பு இ–விலக்கு பக்கம் அ.சா.3ம், அவரது நண்பர் முத்துக்குமாரும் வரும்போது போலீசார் தன்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் போலீசார் கேட்டுக்கொண்டதால் கையொப்பம் போட்டுக்கொடுத்ததாகவும், அதில் எழுதப்பட்டுள்ள விவரம் அ.சா.3 க்கு தெரியாது எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.4 திரு.ஹரிஹரன், சிறப்பு உதவி ஆய்வாளர் சாட்சியத்தில், கடந்த 20.12.2014ம் தேதி 09.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த ஜெய்சங்கர் என்பவர் காவல் நிலையப் பொறுப்பிலிருந்தபோது ரெங்கராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலையம் வந்து அதன் தன்மைக்கேற்ப நிலையக் குற்ற எண்.187/2014படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், பின்னர் வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் சுகிலா அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 20.12.2014ம் தேதி 12.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சங்கர், அந்தோணிசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் அ.சா.ஆ.7 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 தயார் செய்ததாகவும், பின்னர் பட்டியல் சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அத்துடன் அவர் பணிமாறுதலாகி சென்றுவிட்டதால் அந்த வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் பத்திரகாளி என்ற பவுன் அவரது மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 20.12.2014ம் தேதி 17.00 மணிக்கு தென்காசி முதல் மதுரை மெயின்ரோட்டில் இ.விலக்கு பக்கம் வாகன தணிக்கை செய்துகொண்டிருந்தபோது TN 76 L 0660 என்ற பதிவெண் கொண்ட பல்சர் இருசக்கர வாகனத்தை முருகன், ஜவராஜா, கிளியரசன் ஆகியோர்களை சாட்சிகள் முத்துக்குமார், அழகு ஆகியோர்கள் முன்பு விசாரித்தபோது எதிரி முருகன் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளதாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி

அ.சா.ஆ.9 என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினம் கொடிக்குறிச்சியிலிருந்து சீவநல்லூர் செல்லும் பாலத்திற்கு அடியில் குற்றஞ்சாட்டப்பட்டவர் முருகன் எடுத்து ஆஜர் செய்த 90 மீட்டர் நீளமுள்ள வெள்ளநிற ஒயரை அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளதாகவும், எதிரி முருகனை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், மற்ற இருவர் இளவர் என்பதால் இளஞ்சிறார் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், பின்பு வழக்கின் விசாரணையை முடித்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும், மற்ற இருவர் மீதும் இளஞ்சிறார் நீதிமன்றத்தில் தனியாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

## Questioning u/s.313(i)(b) Cr.P.C

6. அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணை முடிவுற்றவுடன் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவருக்கு பாதகமாக உள்ளவை குறித்து குவிமுச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் விளக்கி வினவியபோது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் அனைத்தும் பொய் என்று கூறினார். தனது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் உண்டு என்று கூறினார். ஆனால், குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் இந்த வழக்கில் எந்தவொரு சாட்சியும் விசாரிக்கவில்லை.

## Points for determination

**7. குற்றம் சாட்டப்பட்டவர் மீது பிரிவு 379 இதச–ன் படியான குற்றச்சாட்டு அரசுத் தரப்பில் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே இந்த வழக்கில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.**

## Appreciation of Evidence

8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனையானது (fact in issue), கடந்த 20.12.2014 ம் தேதி காலை 08.00 மணிக்கு ஸ்ரீநல்லமணி யாதவா கல்லூரிக்கு கிழக்கே மங்கம்மாள் சாலைக்கு கீழ்புறமுள்ள அ.சா.1 க்கு சொந்தமான நிலத்தில் வடக்கோரமாக கிழமேலாக தரையில் பதிக்கப்பட்டிருந்த சுமார் ரூ.16,000 மதிப்புள்ள 360 அடி அளவுள்ள வயரினை குற்றஞ்சாட்டப்பட்டவர் திருடிச் சென்றாரா? அவரது செயல் இதச பிரிவு 379 குற்றத்தில் வருகிறதா? என்பதேயாகும்.

9) மேற்படி இவ்வழக்கின் தீர்மானிக்கப்பட வேண்டிய fact in issue குறித்து அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில்,

(i) இலத்தூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் 20.12.2014 ம் தேதி 17.00 மணிக்கு இலத்தூர் காவல் நிலைய குற்ற எண்.246/2014, 247/2014, 248/2014, பிரிவு 379 இதச ஆகிய குற்ற வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகளை தேடி, தென்காசி டு மதுரை சாலை இ–விலக்கு ரவுண்டானா பக்கம் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது, மேற்படி சாலையில் TN 76 L 0660 என்ற பல்சர் இருசக்கர வாகனத்தில் வடக்கிலிருந்து தெற்காக குற்றம்சாட்டப்பட்டவர் இருசக்கர வாகனத்தின் பின்புறம் இளவர் ஐவராஜா என்பவரை உட்கார வைத்து வந்தபோது இலத்தூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்றம்சாட்டப்பட்டவரை பிடித்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அதன் அடிப்படையில் இந்த வழக்கில் அ.சா.1 க்கு சொந்தமான திருடுபோன வயரினை கைப்பற்றியுள்ளார்.

(ii) எனவே இந்த வழக்கில் அ.சா.1 க்கு சொந்தமான சுமார் ரூ.16,000 மதிப்புள்ள 360 அடி அளவுள்ள திருட்டு போன வயரினை குற்றஞ்சாட்டப்பட்டவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் தகவல் அடிப்படையில் இலத்தூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் என்பவர் கைப்பற்றியது சட்டப்படி ஏற்கத்தக்கதா? என பரிசீலனை செய்கையில்,

இந்த வழக்கில் இலத்தூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் 20.12.2014 ம் தேதி 17.00 மணிக்கு இலத்தூர் காவல் நிலைய குற்ற எண்.246/2014, 247/2014, 248/2014 , பிரிவு 379 இதச ஆகிய குற்ற வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகளை தேடி, தென்காசி டு மதுரை சாலை இ–விலக்கு ரவுண்டானா பக்கம் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது, மேற்படி சாலையில் TN 76 L 0660 என்ற பல்சர் இருசக்கர வாகனத்தில் வடக்கிலிருந்து தெற்காக குற்றம்சாட்டப்பட்டவர் இருசக்கர வாகனத்தில் பின்புறம் இளவர் ஐவராஜா என்பவரை உட்கார வைத்து வந்தபோது இலத்தூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்றம்சாட்டப்பட்டவரை பிடித்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அதன் அடிப்படையில் 20.12.2014 ம் தேதி 20.00 மணிக்கு கொடிக்குறிச்சியிலிருந்து சீவநல்லூர் செல்லும் ஓடையில் உள்ள பாலத்தின் அடியில் வைத்து சாட்சிகள் முத்துக்குமார், அழகு ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார்.

எனவே குற்றஞ்சாட்டப்பட்டவர் இலத்தூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளரிடம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலம் பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் இந்த வழக்கு சொத்து கைப்பற்றியிருந்தால், அது Bharatiya Shakshya Adhiniyam Act பிரிவு 23(2)–ன் படி relevant fact ஆகும்.

அதேவேளையில் இலத்தூர் காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் குற்றஞ்சாட்டப்பட்டவரை கைது செய்து அவரிடம் பெற்ற ஒப்புதல் வாக்குமூலத்திலிருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் வழக்கு சொத்துக்களை கைப்பற்றி இருப்பது ஏற்கத்தக்கதா (Admissible) என பார்க்கையில்,

இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூல தகவல் அடிப்படையில் இந்த வழக்கு சொத்தினை கொடிக்குறிச்சியிலிருந்து சீவநல்லூர் செல்லும் ஓடை பாலத்திற்கு அடியில் வைத்து கைப்பற்றிய இலத்தூர் காவல் நிலைய

சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பாலகிருஷ்ணன் என்பவர் முக்கியமான சாட்சி (Material witness) ஆவார்.

ஆனால் இந்த வழக்கில் புலன்விசாரணை அதிகாரியான ஆய்க்குடி காவல்நிலைய உதவி ஆய்வாளர் S.பத்திரகாளி என்ற பவுன் என்பவர், இந்த வழக்கு சொத்தினை இலத்தூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பாலகிருஷ்ணன் என்பவரை சாட்சியாக விசாரிக்கவில்லை. எனவே இந்த வழக்கில் முக்கியமான சாட்சியை (Material witness) சாட்சியாக விசாரிக்காதது அரசு தரப்பிற்கு பாதகமாக உள்ளது.

(iii) இருந்தபோதிலும் இந்த வழக்கு சொத்தினை அத்தாட்சியில் கைப்பற்றிய இலத்தூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பாலகிருஷ்ணன் என்பவரை சாட்சியாக விசாரிக்காமல் இருந்தாலும், அவர் இந்த வழக்கில் திருடுபோன ஒயரினை சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து 20.12.2014 ம் தேதி 20.00 மணிக்கு கொடிக்குறிச்சியிலிருந்து சீவநல்லூர் செல்லும் ஓடை பாலம் அடியில் வைத்து கைப்பற்றியுள்ளார். அதனை அத்தாட்சி சாட்சிகள் மூலம் அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என பார்க்கையில்,

அத்தாட்சியில் சாட்சி கையொப்பம் செய்த முத்துக்குமார் (அ.சா.2) அவரது முதல் விசாரணை சாட்சியத்தில் கீழ்க்கண்டவாறு நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார்.

> **"கடந்த 10 வருடத்திற்கு முன்பு மாலை சுமார் 5 மணியளவில் நானும், எனது நண்பர் அழகு என்பவரும் இ–விலக்கு பக்கம் இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தோம். அப்போது போலீசார் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தார். அப்போது போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். போலீசார் கேட்டுகொண்டதால் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். அதில் எழுதப்பட்டுள்ள விவரம்**

**எனக்கு தெரியாது."**

எனவே மேலே கண்ட அ.சா.2 சாட்சியத்திலிருந்து, 10 வருடத்திற்கு முன்பு 5 மணியளவில் இ–விலக்கு பக்கம் வைத்து அத்தாட்சியில் கையொப்பம் செய்ததாக தெளிவாகிறது.

அதேவேளையில் இந்த வழக்கு சொத்தினை இலத்துர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் 20.12.2014ம் தேதி 20.00 மணிக்கு கொடிக்குறிச்சியிலிருந்து சீவநல்லுர் செல்லும் ஓடை பாலம் அடியில் வைத்து அ.சா.2 முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றியதாக கூறியுள்ளார். அதனால் அந்த அத்தாட்சியில் 5 மணிக்கு இ–விலக்கு பக்கம் வைத்து அ.சா.2 கையொப்பம் செய்ததாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்திருப்பது ஏற்கத்தக்கதாக உள்ளது. அதனால் அத்தாட்சியில் அன்றையதினம் 20.00 மணிக்கு கொடிக்குறிச்சியிலிருந்து சீவநல்லுர் செல்லும் ஓடை பாலம் அடியில் வைத்து கையொப்பம் செய்தார் என காட்டியிருப்பது உண்மையில்லை என இந்த நீதிமன்றம் கருதுகிறது. அதனால் சம்பவ இடத்தில் வைத்து அத்தாட்சி தயார் செய்யப்படவில்லை என்பது நீதிமன்றத்திற்கு தெளிவாகிறது.

(iv) அடுத்தததாக மற்றொரு அத்தாட்சி சாட்சியான அழகு (அ.சா.3) அவரது முதல் விசாரணை சாட்சியத்தில் கீழ்க்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்.

> **"சுமார் 10 வருடத்திற்கு முன்பு இ–விலக்கு பக்கம் நானும், எனது நண்பர் முத்துக்குமாரும் வரும்போது போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். போலீசார் கேட்டுக்கொண்டதால் கையொப்பம் போட்டுக்கொடுத்தேன். அதில் எழுதப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது."**

எனவே மேலே கண்ட அ.சா.3 சாட்சியத்திலிருந்து, அத்தாட்சியில் 10 வருடத்திற்கு முன்பு 5 மணியளவில் இ–விலக்கு பக்கம் வைத்து அத்தாட்சியில் கையொப்பம் செய்ததாக தெரியவருகிறது.

அதேவேளையில் இந்த வழக்கு சொத்தினை கைப்பற்றிய இலத்தூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் அத்தாட்சியில் 20.12.2014 ம் தேதி 20.00 மணிக்கு கொடிக்குறிச்சியிலிருந்து சீவநல்லூர் செல்லும் ஓடை பாலம் அடியில் வைத்து அ.சா.3 முன்னிலையில் அத்தாட்சியில் வழக்கு சொத்தினை கைப்பற்றியதாக கூறியிருப்பது உண்மையில்லை என அ.சா.3 சாட்சியத்திலிருந்து தெளிவாகிறது.

அதனால் இந்த வழக்கில் இலத்தூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் குற்றம்சாட்டப்பட்டவரிடம் பெற்ற ஒப்புதல் வாக்குமூலத்திலிருந்து பெற்ற தகவலின் அடிப்படையில் இந்த வழக்கு சொத்து கைப்பற்றியதால் அது Bharatiya Shakshya Adhiniyam Act பிரிவு 23(2)–ன் படி relevant fact ஆக இருந்தாலும்,

ஏற்கனவே இலத்தூர் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பாலகிருஷ்ணன் என்பவருக்கு தெரிந்த தகவல் அடிப்படையில்தான் வழக்கு சொத்தினை கொடிக்குறிச்சியிலிருந்து சீவநல்லூர் செல்லும் ஓடை பாலத்திற்கு அடியில் வைத்து கைப்பற்றியுள்ளார். அதனால் அவ்வாறு கைப்பற்றியிருப்பது பிரிவு 27 சாட்சிய சட்டத்தில் கூறியுள்ள Distinct Fact இல்லை. அதனால் மேற்கண்ட பரிசீலனைகளின்படி இந்த வழக்கில் இலத்தூர் காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் குற்றஞ்சாட்டப்பட்டவரை கைது செய்து, அவரிடம் பெற்ற ஒப்புதல் வாக்குமூலத்திலிருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் வழக்கு சொத்துக்களை கைப்பற்றி இருப்பது சாட்சியத்தில் admissible இல்லை என இந்நீதிமன்றம் தீர்வுக்கு வருகிறது.

(iv) அதேபோல் குற்ற வழக்குகளில் சொத்துக்களை கைப்பற்றுதல் மகஜரிலோ, அத்தாட்சிலோ சாட்சி கையொப்பம் செய்த சாட்சிகள் நீதிமன்ற சாட்சியத்தில் எவ்வாறு வை recovery யை நிரூபிக்கும்விதமாக சாட்சியம் அளிக்கவேண்டும் என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் **Shahaja alias Shahajan Ismail Mohd. Shaikh v. State Of Maharashtra AIR Online 2022 (SC) 1011** என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளது.

**"A panch– nama which can be used only to corroborate the panch has to be read over to the panch and only thereafter it can be exhibited. If the panch has omitted to state something which is found in the panchnama, then after reading over the panchnama the panch has to be asked whether that portion of the panchnama is correct or not and whatever reply he gives has to be recorded. If he replies in the affirmative, then only that portion of the panchnama can be read into evidence to corroborate the substantive evidence of the panch. If he replies in the negative, then that part of the panchnama cannot be read in evidence for want of substan– tive evidence on record. It is, therefore, necessary that care is taken by the public prosecutor who conducts the trial that such a procedure is followed while examin– ing the panch at the trial. It is also necessary that the learned trial judge also sees that the panchnama is read over the panch and thereafter the panchnama is exhibited after following the procedure as indicated above."**

எனவே, இந்த வழக்கு சங்கதிகளின்படி, வழக்கு சொத்துக்களை கைப்பற்றிய இடமான கொடிக்குறிச்சியிலிருந்து சீவநல்லூர் செல்லும் பாலத்திற்கு அடியில் ஆகும். அங்கு வைத்து அத்தாட்சி தயார் செய்யப்பட்டுள்ளது. அதில் சாட்சிகளாக முத்துக்குமார், அழகு ஆகியோர் கையொப்பம் செய்துள்ளனர். அவர்கள் அத்தாட்சியில் சொல்லப்பட்ட சங்கதிகளை வலியுறுத்தி நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை.

அதனால் மேற்படி முன்தீர்ப்பில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டிய சட்டக்கோட்பாட்டின்படி இந்த வழக்கு அத்தாட்சி சாட்சிகள் நீதிமன்ற சாட்சியத்தில்

அத்தாட்சியில் உள்ள சங்கதிகளை வலியுறுத்தி சாட்சியம் அளித்திருந்தால்தான் அந்த சாட்சியம் reliable ஆகும். அவ்வாறு இந்த வழக்கில் அரசு தரப்பில் சாட்சியங்கள் எதுவும் அளிக்கப்படவில்லை. அதனால் அத்தாட்சியில் சொன்ன சங்கதிகள் அரசு தரப்பில் proved செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

10. எனவே மேலே கண்ட பரிசீலனையின்படி இந்த வழக்கில் வழக்கு சொத்தினை கைப்பற்றிய சிறப்பு உதவி ஆய்வாளர் சாட்சியாக விசாரணை செய்யாததாலும், கொடிக்குறிச்சியிலிருந்து சீவநல்லூர் செல்லும் பாலத்திற்கு அடியில் வைத்து சாட்சிகள் முன்னிலையில் சொத்தினை 20.12.2014 ம் தேதி 20.00 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றியதாக உள்ளது. அதேவேளையில் அத்தாட்சி சாட்சிகள் அத்தாட்சியில் உள்ள கையொப்பத்தினை 20.12.2014 ம் தேதி 5 மணிக்கு இவிலக்கு பக்கம் வைத்து கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்திருப்பதாலும், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பாலகிருஷ்ணன் என்பவர் வழக்கு சொத்தினை கைப்பற்றியது Distinct Fact இல்லை என தீர்மானம் செய்யப்பட்டிருப்பதாலும், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான இதச பிரிவு 379–ன் படியான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என தீர்மானத்திற்கு வருகிறது.

11. முடிவாக, இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் பிரிவு 379 இதச–ன் படி குற்றவாளி இல்லை என தீர்மானித்து BNSS பிரிவு 271(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

12. இந்த நீதிமன்றத்தில் PR.104/2015 மூலம் ஒப்படைக்கப்பட்ட வழக்கு சொத்தினை புகார்தாரர் 30.03.2015 ம் தேதி சி.ஆர்.எம்.பி.எண்.3199/2015 ல் ஏற்பட்ட உத்தரவுப்படி இடைக்காலமாக பெற்றுச்சென்றுள்ளார். அவரே வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

13. இவ்வழக்கில் மாண்புமிகு திருநெல்வேலி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற Crl.M.P.No.211/2015, 22.01.2015 தேதியிட்ட உத்தரவின்படி பிணையில் சென்றுள்ளார். குற்றம்சாட்டப்பட்டவர் எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

**Particulars under rule 106 of Criminal Rules of Practice 2019**

| S.No. | Case No. | CC.No.426/2016 | |
|---|---|---|---|
| 1. | Name of the police station and crime number of the offence | Ayikudy Police Station, Cr.No.187/2014 u/s. 379 IPC | |
| 2. | Name | Murugan | |
| 3. | Fathe Name | S/o. Maridurai | Description of the Accused |
| 4. | Occupation | -- | |
| 5. | Residence | Parvathi amman kovil street, Kodikurichi. | |
| 6. | Age | 21/14 | |
| 7. | Occurence | 20.12.14 | |
| 8. | Complaint | 20.12.14 | |
| 9. | Apprehension | 23.12.2014 | |
| 10. | Release of bail | 23.01.2015 | |
| 11. | Commitment | -- | Date of |
| 12. | Commencement of trial | 30.07.2025 | |
| 13. | Closure of trial | 09.07.2026 | |
| 14. | Sentence of order | 15.07.2026 | |
| 15. | Service of copy of judgement of finding on accused | Acquittal | |
| 16. | Explanation of delay | --- | |

**CASE SUMMERY AS PER THE CIRCULAR OF HON'BLE HIGH COURT, MADRAS IN R.O.C.NO.814/2020/RG/P1, DT.07.04.2021**

| | | | |
|---|---|---|---|
| i. | The period of remand of the accused | | 23.12.2014 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ii. | The date of filing of the complaint/final report in the Court | | 20.07.2016 | | |
| iii. | The date of committal of the case to the Court of Session | | --- | | |
| iv. | The date of questioning of the accused under section 228, 240, 246 and 251 fo the Code of Criminal Procedure 1973 as the case may be | | 15.07.2025 | | |
| v. | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts:except routine petitions like petitions under section 317 of the Code: | | --- | | |
| vi. | Date of examination in-chief and cross-examination of witness | | PW1 | 11.08.2025 | 11.08.2025 |
| | | | PW2 | 11.08.2025 | 11.08.2025 |
| | | | PW3 | 19.08.2025 | 19.08.2025 |
| | | | PW4 | 14.10.2025 | 14.10.2025 |
| Vii. | Date of examination of the accused under section 313 of the code | | 27.10.2025 | | |
| Viii. | Details of abscondence of an accused and his appearance/ production, as the case may be | | -- | | |
| ix. | Grant of stay by superior courts and the result thereof | | -- | | |

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 15 ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA Date: 2026.07.15 17:32:06 +0530

நீதித்துறை நடுவர்,
செங்கோட்டை.

**Annexure ;**

**Witnesses on the prosecution side :**

| Prosecution witness No. | Name of Witness | Description |
|---|---|---|
| 1 | Rengaraj | Complainant |
| 2 | Muthukumar | Confession statement and Athachi witness |
| 3 | Azhagu | Confession statement and Athachi witness |
| 4 | Tr.Hariharan | Special Sub Inspector, Ayikudy P.S. |

**Exhibits marked on the Prosecution Side :–**

| Exhibit Nos. | Description of the Exhibit | Proved by/Attested by |
|---|---|---|
| 1 | Complaint | PW1 |
| 2 | The 1st signaure of PW2 in Confession statement | PW2 |
| 3 | The 1st signaure of PW2 in Athachi | PW2 |
| 4 | The 2nd signaure of PW3 in Confession statement | PW3 |
| 5 | The 2nd signaure of PW3 in Athachi | PW3 |
| 6 | First Information Report | PW4 |
| 7 | Observation mahazar | PW4 |
| 8 | Rough Sketch | PW4 |
| 9 | The admissible part of confession statement | PW4 |
| 10 | Athachi | PW4 |
| 11 | Form 91 | PW4 |

**Material Objects produced on the side of Prosecution** :–

M.o.1 – Approximately 108 meters long black electrical cable wire

**<u>Defense side witness, documents</u>** :– Nil

**<u>Material Objects on the defense side :–</u>** Nil

**<u>குறிப்பு:</u>**

1. எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கவில்லை.
2. குற்றம் சாட்டப்பட்டவர் பிணையில் இருந்தார்.
3. வழக்கு முடிவு பற்றி காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2026.07.15 17:32:11 +0530

நீதித்துறை நடுவர்,
செங்கோட்டை.